# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,930—1970 ඔක්තෝබර් 30 වැනි සිකුරාදා—1970.10.30

14,930 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

ஒவ்வொரு தொகுதியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துகொள்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 983 | ஆமவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 990 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. . | 995 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் . . | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் . | — | நானாவித அறிவித்தல்கள் .. | 999 |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேற

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

---

*வதைப பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவும் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கி விடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கி விடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. A. 74/X. 2274/70.

## கல்வி அமைச்சு

### II ஆந் தர கல்விப் பணிப்பாளர் பதவி

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பம் கோரி 1970.9.11 ஆந் தேதிய 14,923 ஆம் இலக்க அரசாங்கச் செய்திமடலில் வெளியான விளம்பரத்தைப் பார்க்க.

"பந்தி 4 (இ) (1)—பிரதான கல்வி உத்தியோகத்தராக ஆகக்குறைந்தது ஒரு வருட சேவை புரிந்தவரும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவரும் அல்லது கல்வி ஆலோசகராக 5 வருடங்களுக்குக் குறையாது சேவை புரிந்தவரும் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்."

விண்ணப்பங்களின் முடிவுத் தேதியும் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது :—

உள்நாட்டு விண்ணப்பங்கள் ; 1970.11.14.

வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.11.20.

2. முந்திய அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்த அபேட்சகர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970, ஆ ஒற்ரேபர் மீ 23 ந உ.

10–1107/1—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,930

---

No. AA 80/X 2291/70

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் குடித்துறை எஞ்சினியரின் (தற்காலிக) பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் குடித்துறை எஞ்சினியரின் (தற்காலிக) பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தில் இருந்து கிடைக்கப் பெறும் அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அத்திகதிகளுக்கு முன்னர் "செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1" என்ற முகவரியில் வந்து சேரும்படியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 14.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 20.11.1970.

குறிப்பு :

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்பவர், தமது முகவரி இடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத 9" × 4" அளவுக்குக் குறையாத கடித உறையையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர்பான ஒரு கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதம் ஆகிவிட்டது என்ற குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. கடைசிநாள் வரை தங்கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்சகர்கள் அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப்பார்கள்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய, அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுபவரிடம் பரீட்சைக்கெனச் செல்லுதல் வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—பதவி தற்காலிக மானது. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குப் பணம் செலுத்த வேண்டும்.

3. **சம்பளம்.**—இப்பதவிக்கான திரட்டுச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

வருடமொன்றுக்கு ரூபா 7,800—3 × 360—8,880/9,600—4 × 360, 11 × 480,—16,320 திறமைகாண் தடைகள் ரூபா 9,600 முன்பும், ரூபா 13,920 முன்பும் உண்டு.

**குறிப்பு :**

(1) மேலேயுள்ள சம்பள அளவுத்திட்டத்தில் வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 13,440 க்கு மேலான சம்பளத்தைப் பெறுவதற்கு உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெறும்பொழுது விண்ணப்பதாரர் வருடாந்தச் சம்பளமாக ரூபா 9,960 ஐ அல்லது அதற்கு மேலான சம்பளத்தைப் பெறுதிருப்பின் அவர் அத் திகதியிலிருந்து மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 9,960 வருடாந்தச் சம்பளத்தைப் பெறுவதற்கு உரிமையுடைய வராவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குப் போதுமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த பண்பும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 14.11.1970 ஆந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(இ) (1) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டப் பரீட்சையில் அல்லது, அதற்குச் சமமான ஒரு அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(2) குடித்துறை (சிவில்) எஞ்சினியர்களுக்கான பரீட்சையின் பகுதிகள் I, I பி, II ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(3) லண்டன் குடித்துறை (சிவில்) எஞ்சினியர்களின் பரீட்சையில் I ஆம், II ஆம் பகுதிகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அவற்றிற்குச் சமமான தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள், வேண்டப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமாபித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்திற்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) பண்பு பற்றிய இரு சான்றிதழ்கள், இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

**குறிப்பு :**

(1) இவ்விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது அவ்விதம் செய்யாமல் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக் கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப் பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படியாக நேராக அனுப்புதல் வேண்டும். இத்தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (“ ஆ ” எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் முக வரிக்கே அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோ கத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் தொகுதி ஆரம்பத்தில வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட (“ அ ” எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அவர்கள் அதில் கூறப்பட்டிருப்பதுபோல நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால், இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தது பற்றி அவர்கள் அறிவிக்கப்படுவார்கள். இத்தேவையின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்ததுபற்றி அறிவித்தல் கொடுக்கப்பட மாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்து கொண்டவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடைக்காமலிருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவார்.

எஸ். பி. நானயக்காரா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 23 ந உ.

10–1107/2—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

No. AA 11/X 2292/70

## கல்வி அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி கட்டுபெத்த, மொறட்டுவ தொலை செய்திப் போக்குவரத்துப் பேராசிரியர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கைத் தொழில் நுட்பவியல் கல்லூரியில் தொலை செய்திப் போக்குவரத்துப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, “ செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 ” என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்:—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—14.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—20.11.1970.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" x 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்ல வரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப் பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங் களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவல கத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாறுசம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அநாதை இளைப்பாற்றுச் சம்பளத் துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூபா 18,240—4 × 600—4 × 900—ரூபா 24,240 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.11.14 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாடின மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) தொலைச் செய்திப் போக்குவரத்தை ஒரு பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் மின்சார எந்திரவியலில் வழங்கப்படும் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) மின்சார எந்திரவியலில் உயர்தொழிற் தகைமைகள் அல்லது தொலைச் செய்திப் போக்குவரத்தில் பட்டப்பின் தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(iii) பட்டம் பெற்றபின், தொலைச் செய்திப் போக்குவரத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு பதவியில் 10 வருட செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் பட்ட வகுப்பு மட்டத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு—

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எவ். பி. நாணயக்காரா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 23 ந் உ.

10–1107/3—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

No. AB. 95 X 2293/70.

## கமத்தொழிற்றிணைக்களம்

### கமத்தொழிற் பொருளாதார நிபுணர் (இரண்டாம் படிமுறை) பதவி

கமத்தொழிற்றிணைக்களத்திலுள்ள இரண்டாம் படிமுறை கமத்தொழிற் பொருளாதார நிபுணர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்:—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 14.11.1970

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 23.11.1970

குறிப்பு :

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம் ;

(iv) **மருந்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப்பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்கு உரித்துடையனவுமாகும். நியமனதாரி, மூன்று வருட காலத்திற்குத் தகுதி காண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு.—

இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 முதல் ரூபா 16,320 வரை, ரூபா 360 கொண்ட ஆண்டுச் சம்பள உயர்வுகள் பன்னிரண்டும், ரூபா 480 கொண்ட ஆண்டுச் சம்பள உயர்வுகள் பதினொன்றும். (1.10.69 க்கு முன் இருந்த இதற்குத் தொடர்பான அடிப்படைச் சம்பளத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,080 முதல் ரூபா 13,200 வரை. ஆண்டுச் சம்பள உயர்வுகள் பன்னிரண்டு, ரூபா 360 தும் பத்து, ரூபா 480 தும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்தநற்குண முடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.11.14 திகதியில் 22 வயதிற்குட்படாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களான அபேட்சகர்களுக்கு வயதெல்லை நிபந்தனை கிடையாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால், கமத் தொழிலியலில் அல்லது பொருளாதாரவியலில் அல்லது கமத்தொழிற் பொருளாதாரவியலில் முதலாம் அல்லது இரண்டாம் பிரிவுக் கலைமானி அல்லது கலைஞானிப் பட்டம் அல்லது இவைகளுக்குச் சமமான தகைமை பெற்றவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—கமத்தொழிலியலில் அல்லது பொருளாதாரவியலில் கலைமானி அல்லது கலைஞானிப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட முதற் பட்டக் கல்வியில் கமத்தொழிற் பொருளாதாரவியலில் சிறப்புத்தகைமை பெற்றவராய் அல்லது கமத்தொழிற் பொருளாதாரவியலை ஒரு பாடமாகக் கற்றுச் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டைய ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித்திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் வீண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒற்ரோபர் மீ 23 ந் உ.

10–1107/4—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

No. AB 102/X 2294/70.

## கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு

### உதவி அதிபர் பதவிகள்

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் உதவி அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்:—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1970.11.14.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.11.20.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். வி. அ. உ. ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளமுமுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டால் முதன்மையில் அவரது நியமனம் குறிப்பிடப்பட்ட காலத்திற்குப் பதில் நியமன அடிப்படையிலிருக்கும்.

3. **சம்பளமும் படிகளும்.**—பதவிக்குரிய ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

வருடத்திற்கு ரூபா 10,040— தொடக்கம் ரூபா 480/— கொண்ட 11 வருடாந்த படி உயர்வுகளைக் கொண்டு வருடத்திற்கு ரூபா 16,320/— வரைக்கும். (ரூபா 14,400/— க்கு முன்பாக தகுதிகாண் தடையுண்டு)

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல்நலமுடைய முடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.11.14. அன்று 30 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இந்த வயதுக் கட்டுப்பாடுகள் ஏற்கெனவே அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தருக்குப் பொருந்தாது).

(இ) உயர்தரப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து வருட அநுபவமும், பொருளாதாரம் அல்லது வர்த்தகம் ஒரு பாடமாகவுமுடைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(i) கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சில் ஏற்கெனவே சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் பொருளாதார உதவியாளர்கள் கைத்தொழில் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாயிருந்த அவர்களது சேவைக் காலம் இதற்குக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.

(ii) கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கைத்தொழில் உத்தியோகத்தர்கள், கைத்தொழில் உற்பத்தி உப கட்டுப்பாட்டதிகாரிப் பதவிகளில் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், பொருளாதார உதவியாளர்கள், கைத்தொழில் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது கைத்தொழில் உற்பத்திகள் உப கட்டுப்பாட்டதிகாரிப் பதவிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளில் 7 வருடங்களுக்குக் குறையாமல் கூட்டுத்தொகை சேவையை அவர்கள் பெற்றிருந்தால் மேலேயுள்ள கல்வித் தராதரங்களைக் கவனியாது தகுதியுடையோராகக் கணிக்கப்படுவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும், காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமையும் தொழினுட்பத் தகைமையும் உயர் தொழிற் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமே அன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப்பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக்குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்.
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 23 ந் உ.

10–1107/5—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## இலங்கை அரச கடற்படை

### மருத்துவ அலுவலர் பதவி

இலங்கை அரச கடற்படையில் ஒரு மருத்துவ அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் இலங்கை அரச கடற்படையின் நிலையான கடற்படையில் நிலையான ஆணையுடைய சத்திர சிகிச்சைத் துணைநிலை அலுவலராக பதவி வழங்கப்பெறுவர்.

3. (அ) மருத்துவ அலுவலரின் சம்பள வீதம் சுகாதாரச் சேவைத் திணைக்களத்து மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதங்களாகும்.

(ஆ) பின்வரும் படிகளும் செலுத்தப்படும் :

(i) சேவைப்படி—துணைநிலை அலுவலருக்கும்—துணைநிலை ஏவுநர்க்கும் மாதத்துக்கு 180 ரூபா ; ஏவுநர்க்கு மாதத்துக்கு 225 ரூபா.

(ii) இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரிமையற்ற படி, இதே தகைமையுடைய அரசாங்க மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதத்தில் செலுத்தப்படும்.

(iii) கடற்படைச் சம்பளக் கோவையை ஏற்பாடு செய்துள்ளவாறு தகைமைச் சம்பளம் அளிக்கப்படும்.

(iv) ஒரு சீருடையப்படி பின்வருமாறு செலுத்தற்பாலதாகும் :

அயனமண்டலப் பிரதேசத்திற்குரிய ஒரு சீருடைக்கு தொடக்கத்தில் 1,000 ரூபா. மேலும் மாதமொன்றுக்கு 25 ரூபா ஒரு சீருடை பேணும் படியாக நியமனத்திகதியிலிருந்து வழங்கப்படும்.

4. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் விவாகமானவரானல், விவாகமானவருக்குரிய (இருந்தால்) வீட்டில் வசிப்பதற்கும் வேலையாள்படி ரூபா 75 றக்கும் தகுதியுடையவர். விவாகமாகாதவராயின் வேலையாளின் சேவையும் கடற்படை விடுதி வசதியுமிருக்கும்.

5. அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்திற்குக்காலம் திருத்தப்பட்ட 1934 பெப்ரவரி 5 இன் இளைப்பாற்றுச் சம்பள அறிக்கையில் அமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியவராவர். மேலும் உயர்ச்சி விபரங்கள் அல்லது சேவை நிபந்தனைகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் கொழும்பு, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. விண்ணப்பகாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருத்தல் வேண்டும்:

(அ) தேசிய இனம் : விண்ணப்பகாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது : 1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 30 ம் திகதி 32 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(இ) தொழிற் கல்வி, கல்வித் தகைமைகள்: விண்ணப்பகாரர், இலங்கை மருத்துவர் சபையில் ஈராண்டுக்கேனும் மருத்துவம் செய்வதற்குப் பதியப்பட்டவரும், மருத்துவத்திலும் சத்திர சிகிச்சையிலும் பட்டம் பெற்றவராகவும் அல்லது அதற்கு மேலதிகத் தராதரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) மருத்துவத் தகுதி : விண்ணப்பகாரர் நியமனத்திற்கு முன் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சோதனையில் தேர்ச்சியும், கடற்படை நிபந்தனையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ தராதரத்திற்கேற்ப இருக்க வேண்டும்.

7. இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக " கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், தபாற்பெட்டி எண் 593, கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையில் இடது மேற்புறத்தில் " மருத்துவ அலுவலருக்கு விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

8. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் சுகாதார சேவை அதிபருக்கு ஊடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படுமிடத்து, அச்சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் எனக்கூறும் சுகாதார சேவை அதிபரின் கடிதமொன்றுடன் அனுப்பப்படல் வேண்டும்.

9. கீழ்க்காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கூடுதலான கல்வித் தகைமையைக் காட்டும் சான்றிதழும் உயர் தொழிலுக்குரிய சன்றிதழும் ;

(இ) விண்ணப்பகாரரை நன்றாகத் தெரிந்த பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரு நற்சான்றிதழ்கள்.

10. விண்ணப்பங்கள் மேற்கூறிய நிபந்தனைகளின்படி இருந்து அவற்றின் தொகை காரணமாக ஒரு பூர்வாங்கத் தெரிவு தேவைப்படின் அது நடாத்தப்படும். இறுதித் தெரிவு, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சையின் பின் செய்யப்படும்.

11. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தும் காலம், இடம், திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இந்நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ இலங்கை அரசாங்கத்தால் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களுக்கும் அதுபற்றி அறிவிக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் புதிய சேவையாளராயிருந்தால், அரசாங்கத்தின் மொழிக்கொள்கையையும், விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் செயற்படுத்துவதற்கு இதுவரையில் செய்யப்பட்ட சட்டங்களுக்கோ இதன்பின் இயற்றப்படும் சட்டங்களுக்கோ இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்.

டீ. வீ. ஹன்ரர்,
கொமடோர்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
தபாற்பெட்டி எண் 593,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 18 ந் உ.

## மருத்துவ அலுவலருக்கு விண்ணப்பம்

### இலங்கை அரச கடற்படை

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் :————.
(வம்சாவழி அல்லது பதிவுவழி, இலங்கையர் எனக் குறிப்பிட வேண்டும். பதிவுவழி என்றால் பதியப்பட்ட திகதி, சான்றிதழின் இலக்கம் குறிப்பிட வேண்டும்)

3. முகவரி அலுவலகம் :————. சொந்த :————.

4. பிறந்த திகதி : ————.

5. பெற்றோரின் விபரங்கள் பின்வருமாறு தருக :————.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | ———— | ———— | ———— |
| தாய் | ———— | ———— | ———— |

6. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா ? ————.

7. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் உடற்பயிற்சி அல்லது விளையாட்டுச் சம்பந்தப்பட்ட தனிச் சிறப்புத் தகைமைகள் ஏதும் உண்டா ? ————.

8. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் ஏதும் சாதித்தது உண்டா ? ————.

9. ஆயுதந்தாங்கிய படையில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் சேவை புரிந்திருக்கிறீரா ? அங்ஙனமாயின் விபரம் தருக :————

10. இப்பதவிக்கு வேறு சிறப்புத் தகைமைகள் உண்டா ? ————.

11. ஆயுதந்தாங்கிய படைச் சேவைக்கு நீர் முன்னர் விண்ணப்பித்துள்ளீரா ? அங்ஙனமாயின் பெறுபேறு என்ன ? ————.

12. கல்விகற்ற பாடசாலையினதும் பல்கலைக்கழகத்தினதும் பற்றிய பின்வரும் விபரங்கள் தருக :————.
பல்கலைக் கழகத்தினதும் பாடசாலையினதும் பெயர் :————.
திகதி : சேர்ந்த : ————. விட்ட : ————.
பகிரங்கப் பரீட்சைகள் : ————.

13. பல்கலைக்கழகத்தை விட்டபின் ஆற்றிய தொழில் பற்றிய கீழ்க் காணும் விபரங்கள் தருக : ————.
வேலைகொள்வோரின் பெயர் : ————.
தொழிலின் தன்மை : ————.
சேவைக்காலம் : ————. தொடக்கம் : ————.
வரைக்கும் : ————.

14. நற்சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் தருக : ————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

10–966—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

### உபஅஞ்சல் அதிபர் பதவி பெலிககா—சந்தி "எ"

### மாநகரசபை காலி.

பெலிககா—சந்தி "எ" காலி மாநகரசபை உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்த அலவுன்சு 75 ரூபாவாகும்.

1. விண்ணப்பதாரர் இலங்கையராயும் 24.11.1970 அன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. மாநகரசபைப் பிரதேசங்கள் 10 வருடத்திற்கு அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தர வாசியாக இருத்தல் வேண்டும்.

3. சிரேட்ட பாடசாலை தாரதரப்பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ் பாஷையும் கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகியவற்றுடன் மூன்று பாடங்களுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

4. தற்பொழுது பெலிககா—சந்தி உபஅஞ்சல் அலுவலகம் இருக்கும் பிரதேசத்தில் உபஅஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்காக ஒரு தகுந்த கட்டிடம் விண்ணப்பதாரரால் வாடகையின்றி வழங்கப்படல் வேண்டும்.

5. காலி, கோட்டை, சேச்வீதியிலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் (தென்) பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொண்ட உரோணியோ செய்யப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 24.11.1970 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அவரை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

காலி அஞ்சல் அலுவலகங்களின் (தென்) பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும், தந்திப்
போக்குவரத்து அதிபரும்.

10–965—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

### வெள்ளவத்தை "ஏ" தர உபஅஞ்சல் அதிபருக்கான பதவி

கொழும்பு 6 ல் இருக்கும் வெள்ளவத்தை உபஅஞ்சல் அலுவலகத்திற்கு உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்த அலவன்சு ரூபா 75 ஆகும்.

(1) விண்ணப்பதாரர் இலங்கையராகவும் 30.11.70 ந் திகதியில் 21 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராயும் இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) நகரசபைப் பிரதேசத்தில் நிரந்தரவாசியாக 10 வருடத்துக்கும் அதற்குக் கூடுதலாயும் இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் வீற்றிருக்கும் வட்டாரத்தில் அல்லது அடுத்த வட்டாரங்களில் உள்ள வாசியாயிருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

(3) சி. பா. த./பொ. த. ப. (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தளவு 3 பாடங்களுடன் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகியவற்றுடன் சித்தியடைந்தவராய் இருத்நல் வேண்டும்.

(4) கொழும்பு 6 ல் வெள்ளவத்தை தெற்கு உபஅஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்கு ஒரு தகுந்த கட்டிடத்தை விண்ணப்பதாரர் வாடகையின்றி வழங்கல் வேண்டும்.

(5) கொழும்பு 1, எச்சலன் சதுக்கம், 5 ம் கட்டடத்தில் உள்ள (மேல் தென்) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 30.11.70 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ அடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தேவைப்படின், மேலதிக விபரங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்,
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

10–967—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

### மகாவலி அபிவிருத்திச் சபை
### எந்திரிப்பதவி

(1970 ஒக்டோபர் மாதம் 16 ந் தேதியில் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்குத் திருத்தம்)

(4) எந்திரிப்பதவிகள் : தரம் II (சிவில், பொறிமுறை, மின் முறை)

(ii) தகைமைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரவியற் பட்டமோ, உயர்தொழில் எந்திரவியல் நிறுவனமொன்றின் அங்கத்துவ உறுப்பு நிலையோ அன்றேல் இரண்டும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) எந்திரவியல் கட்டுவேலையின் வடிவமைப்பிலோ கட்டுமானத்திலோ அன்றேல் இரண்டிலுமோ அல்லது மின் முறை பொறிமுறைப் பொறித்தொகுதி வடிவமைப்பு, தாபிப்பு, பேணல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ந் தேதியாகும்.

உள்ளூர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ந் தேதியாகும்.

தலைவர்,
கொழும்பு. மகாவலி அபிவிருத்திச் சபை.

10-1096—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

ஈ. 5/68.

### தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சகர்களாக நியமிப்பதற்குப் பரீட்சார்த்திகளைத் தெரிவுசெய்தல்—1970

1. (அ) தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கென 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசிக் கிழமையில் அன்றி அதற்கு அண்மையில் ஒரு திறந்த போட்டிப் பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சையின் திகதி பரீட்சை ஆணையாளரினால் விளம்பரப் படுத்தப்படும். இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளமுடையனவுமாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

(ஆ) நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை எட்டு என மதிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் நலத்துக்காக அவசியமென்று கருதின் வெற்றிடங்கள் நிரப்புவதை அரசாங்க சேவை அதிகாரசபை தவிர்க்கவும் கூடும்.

2. **விண்ணப்பிக்கும் முறை**—(அ) விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளரிடமிருந்து 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கு சொந்த முகவரியிடப்பட்ட, முத்திரையில்லாத, அளவில் 9" × 4" க்குக் குறையாத தபாலுறையினை அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேற்பக்கத்தில் " தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சருக்கான பரீட்சை " என எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா.

(ஆ) பரீட்சைக்கான விண்ணப்பங்களை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ளவர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். பரீட்சை

ஆணையாளரது அல்லது அவரது திணைக்களத்திலுள்ள வேறு யாராவது உத்தியோகத்தரது சொந்த முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட லாகாது. விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் தபாலுறையின் மேற்பக்க இடதுபுறத்தில் " தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சருக்கான பரீட்சை " என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவங்கள் எல்லா வகையிலும் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேட்கப்பட்டிருக்கும் எல்லா விபரங்களும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டிராவிடில், அதிலடங்கியுள்ள விபரங்களை கருத்திற் கொண்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட இடமுண்டு.

(ஈ) விண்ணப்பப் படிவம் தபாலில் காணுமற்போனமை, அல்லது தாமதமானவை போன்ற முறைப்பாடுகள் கவனிக்கப்படமாட்டா. கடைசி சில தினங்கள் வரை விண்ணப்பப் படிவங்கள் அனுப்புதலை தாமதமாக்குவதினுல் ஏற்படக்கூடிய நஷ்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க நேரிடும்.

(உ) விண்ணப்பப் படிவங்களிலிருந்து கிழித்தெடுக்கக்கூடிய அச்சிடப் பட்ட அஞ்சல் அட்டையில் பரீட்சார்த்திகள் தமது பெயரையும் முகவரியை யும் மட்டுமே குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமையை அறிவிப்பதற்கு இவை உபயோகிக்கப்படும். இம்முறையை அனுட்டிக்காத பரீட்சார்த்திகளுக்கு அவரவர் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப் படமாட்டாது. இம்முறையை அனுட்டித்தும், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொண்ட கடைசித் தினத்திலிருந்து மூன்று வாரங்களுக்குள் தத்தமது விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிப்பு கிட்டாத பரீட்சார்த்திகள், இது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். இப்பிரமாணத்தை அனுட்டிக்கத் தவறும் பரீட்சார்த்தியைப் பற்றி கவனஞ் செலுத்துவது சம்பந்தமாக பரீட்சார்த்திக்குள்ள உரிமை இல்லாமற் போகும்.

(ஊ) பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களை வேண்டப்படும்போது சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவர் :—

(1) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (உதவிபெறும் பாடசாலைகள் சம்பந்தமான நீதிப்பிரமாணங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(2) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரத்துடன் நான்குக்கு மேற்படாத அத்தாட்சிப் பத்திரங்கள். இவைகளில் குறைந்தது ஒன்ருவது பரீட்சார்த்தியின் கல்வி அல்லது கல்லூரிப் போதனுசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்கவேண்டும்.

**3. பரீட்சைக்குத் தோற்ற அனுமதி.**—(i) விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்ற சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவார். பரீட்சார்த்திகள் அனுமதிப்பத் திரங்களை பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள மேற்பார்வையாள ரிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பரீட்சார்த்திகள் இப்பரீட்சை எடுக்கத்தகுதியற்றவராவர்.

பரீட்சார்த்திகள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபங்களி லேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும். எந்தப் பரீட்சார்த்தியும் அவருக்கொதுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த எந்தவொரு மண்டபத்துள்ளும் அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை நடைபெறும் தினம் தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளருக்குக் காட்ட வேண்டும். இப்பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வறிவித்தலின் முடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த் திகளும் இவ்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

பரீட்சை நடைபெறும் தினத்திலிருந்து 10 நாட்களுக்கு முன்பாவது தமது அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்திகள், அதனை உடனே பரீட்சை ஆணையாளருக்கு, த. பெ. இலக்கம் 1503, கொழும்பு 2 என்ற முகவரிக்கு (தந்தி : " எக்சாம்ஸ் கொழும்பு ") அறிவிக்க வேண்டும். இதனை அறிவிக்கும்பொழுது, கீழ்க்காணும் தகவல்களும் கொடுக்கப்பட வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(3) முகவரி ;

(4) தபாற் கந்தோர், தபாற் பதிவு இலக்கம், விண்ணப்பம் தபாலிலிடப்பட்ட திகதி என்பன.

(ii) பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுதல் தகைமைகளுடையவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதென கருதப்படலாகாது.

பரீட்சை ஆணையாளர் எந்தப் பரீட்சார்த்தியையும் தனது தற்றுணி பின்படி அப்போதைக்கு பரீட்சைக்கு அனுமதிக்கலாம். அவ்வனுமதி பின்பு நிராகரிக்கப்படலாம், அல்லது அங்கீகரிக்கப்படலாம்.

**4. தகைமைகளுக்கான நிபந்தனைகள்**

(i) இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஆண்களாகவும் இலங்கையராகவும் இருக்கவேண்டும். இப்பரீட்சையின் பொருட்டு இலங்கையர் என்பவர் வம்சாவழியாகவோ பதிவு மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும் ;

(ii) பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி 22 வயதை அடைந்தவராகவும் அல்லது 27 வயதை அடையாத வராகவும் இருக்க வேண்டும் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

குறிப்பு.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்ற, 31 வயதிற்கு உட்பட்ட குறைந்தது 3 வருடங்களாவது பணிபுரிந்த பொலிஸ் பரிசோதகர்களும், உதவிப் பொலிஸ் பரிசோதகர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். அப்படி யான விண்ணப்பதாரிகள் இருமுறை மாத்திரமே இப்பரீட்சைக்கு தோற்றலாம். இவர்களைப் பொறுத்தவரை விவாகம் ஒரு தகுதியின்மையாகாது ;

(iv) நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டும் ;

(v) விவாகமாகாதவராக இருக்க வேண்டும் ;

(vi) சிறந்த உடலமைப்பு உடையவராகவும், இத்தீவில் எப்பகுதியிலும் சேவை புரிவதற்கேற்ற தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும் ;

(vii) அவரின் கண்பார்வையின் ஆகக்குறைந்த அளவு 6/6 ஆகவும் 6/12 ஆகவும், நிறப்பார்வை சாதாரணமாகவும் இருக்கவேண்டும்; கண்ணுடிகள் உபயோகிக்கவேண்டிய பரீட்சார்த்திகள் தகுதியற் றவராவர்.

**5. பரீட்சைத் திட்டம்.**— தகைமைகாண் எழுத்துப் பரீட்சைக்காய விடயங்களும், ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்வருமாறு :—

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | வியாசமும் சுருக்கமும் .. .. | 200 |
| 2. | பொது அறிவு .. | 200 |
| 3. | இலங்கையின் சமூக, அரசியல் பொருளாதார அபிவிருத்தி .. | 200 |
| 4. | நேர்முகப் பரீட்சை (பொது) .. .. | 250 |

**மொழி மூலம்.**—போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(i) பரீட்சார்த்திகள் தகைமைப் பரீட்சையில் எம்மொழியில் எழுதிச் சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே அல்லது சிங்களமாகிய அரசகரும் மொழியிலேயே இப்பரீட்சையை எழுதுதல் வேண்டும்.

(ii) தகைமைப் பரீட்சையில் வெவ்வேறு பாடங்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழியிலே சித்திபெற்ற பரீட்சார்த்திகள் தகைமைப்பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியிலே சித்தியடைந் தார்ளோ அம்மொழியிலேயே அல்லது சிங்களமாகிய அரசகரும் மொழியிலேயே இப்பரீட்சையை எழுதுதல் வேண்டும்.

(iii) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப்பாடத்தை இன்னெரு மொழியிலும் சித்தியடைந்த சிறப்புப் பட்டங் களையுடைய பரீட்சார்த்திகள் பிரதான பாடத்தை எம்மொழியிலே சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே அல்லது சிங்களமாகிய அரசகரும் மொழியிலேயே இப்பரீட்சையை எழுதவேண்டும்.

குறிப்பு (1) மேலேயுள்ள (i), (ii) இல் உள்ள " தகைமைப் பரீட்சை " என்ற பதம் இந்த அறிவித்தலின் 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சையைக் குறிக்கும்.

குறிப்பு (2) பரீட்சார்த்திகள் பரீட்சையின் எல்லா வினுப்பத்திரங்களுக் கும் ஒரு மொழியில் மட்டும் எழுதவேண்டும்.

குறிப்பு (3) விண்ணப்பங்களின் முடிவுத் தேதிக்குப் பின்னர் மொழி மூலத்தை மாற்றப் பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**பாடங்கள்.**—பரீட்சையில் பின்வரும் பாடங்கள் அடங்கும் :—

ஒவ்வொரு வினுத்தாளும் இரண்டு மணித்தியால நேரமுடையதாகும்.

**பாடத்திட்டம் பின்வருமாறு :—**

**வியாசமும் சுருக்கமும்.**—குறிப்பிட்ட 4 அல்லது 5 விடயங்களுள் ஒன்றைப் பற்றி ஒரு வியாசம் எழுதுதல். இவ்விடயங்கள் விசேட கல்வித்துறை சம்பந்தப்பட்டதாக இருக்காது. ஆனல் இது பரீட்சார்த்தி யின் பொது அறிவையும் புத்தி சாதுரியத்தையும், சிந்தனையிலும், பேச்சிலும் அவரிடமுள்ள பொதுவான திறமையையும் பரீட்சிப்பதற்காக அமைக்கப்படும். விடயங்களைக் கையாளும் தன்மை, சிந்தனையின் திறமை, மொழியழகும் ஒழுங்கும் ஆகியவற்றைக் கொண்டு வியாசம் மதிப்பிடப் படும். இது தெளிவாகவும் வாசிக்கக்கூடியதாகவும் எழுதப்படவேண்டும். வசனநடையிலுள்ள பந்திகளில் ஒன்ருே அல்லது பலவோ பரீட்சார்த்தி யின் சொந்த வசனங்களில் மிகவும் சுருக்கமாக எழுதுவதற்காகக் கொடுக்கப்படும்.

**பொது அறிவு.**— வினாத்தாள் பரீட்சார்த்தியின் பொது அறிவைச் சோதிப்பதற்கென அமைக்கப்படும். இதற்கென விசேடமான பாடத்திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

**இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார அபிவிருத்தி.**—இவ்வினாத் தாள் 1900 தொடக்கம் இற்றைவரை இலங்கையின் சமூக அரசியல், பொருளாதார அபிவிருத்தி பற்றியதாகும்.

6. (1) இப்பரீட்சைக்காய கட்டணம் ரூபா 40 ஆகும். இத்தொகை பெறுமதியான முத்திரைகள் அதற்கென உள்ள கூட்டில் ஒட்டப்பட்டு, பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் அம்முத்திரையில் இடப்பட வேண்டும். 15.5.1969 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்த லுக்கிணங்க தகைமைகாண் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவிகளுக்கு விண்ணப்பித்தோர் இதற்கு விண்ணப்பிப்பதற்கு இன்னமும் தகுதி யுடையோராயின் இக்கட்டணத்திலிருந்து தவிர்க்கப்படுகின்றனர். இவர்கள் 27.7.1969 ஆம் திகதி நடைபெற்ற பரீட்சையின் தமது சுட்டி லக்கத்தை முத்திரைக்காய கூட்டில் குறிப்பிடவேண்டும். மேற்கூறிய வர்த்தமானி அறிவித்தலின்கீழ் விண்ணப்பித்து, இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிரும்பாதோர், விண்ணப்பிக்கின் அவர்களால் செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும். அப்படியான வேண்டுதல்கள் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பு பரீட்சை ஆணையாளருக்குக்கிடைக்கக் கூடியதாய் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதியின் பின் கிடைக்கும் வேண்டுதல்கள் வரவேற்கப்படமாட்டாது.

(2) **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**— (அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பங்கள் அந்த அந்தத் திணைக்களத்தலைவர்களால் அல்லது அவர்களின் சார்பில் பதில் கடமையாற்ற அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாராவது உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்). மற்றையவர்களுடைய கையொப்பங்கள் உறுதிப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட பின்வரும் ஒருவரால் உறுதிப்படுத் தப்பட வேண்டும்—சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரக்கிராசியார், பகிரங்க நொத்தாரிஸ், அரசாங்க அல்லது பணிப்பாளர் முகாமையிலுள்ள பாடசாலைகளின் தலைவர்கள், கடற்படை, ஆகாயப்படை அல்லது தரைப்படையில் ஆணை பெற்ற உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 4,800 அல்லது அதற்கு மேற்பட்ட திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், புத்த கோவில் ஒன்றின் தலைமைக் குரு, அல்லது பிற சமய நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அல்லது முக்கிய நிலையிலுள்ள ஒரு குரு.

(3) பரீட்சைக் கட்டணம் முழுதாகவோ ஒரு பகுதியோ திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

7. **அறிமுக அட்டைகள்.**— பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றும்போது, பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். பின்வரும் சாதனங்களில் எவையேனும் இந்நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தலைமைத் தபாலதிபரினால் வழங்கப்பட்ட அறிமுக அட்டை ;

(ஆ) பரீட்சைத் தினத்திற்கு முன்னர், அதுவும் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட பெறுமதி வாய்ந்த ஒரு கடவுச்சீட்டு ;

(இ) மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப் பகுதியில் அரசாங்க திணைக்களமொன்றினால், அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றினால், அல்லது சட்டபூர்வமான ஸ்தாபனமொன்றினால் வழங்கப்பட்ட, பரீட்சார்த்தியின் புகைப்படம் கொண்ட ஓர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது அனுமதிச் சீட்டு அல்லது வேறு ஏதாவதொரு தஸ்தாவேஜு.

8. **தவறான விபரங்களை சமர்ப்பித்தலுக்கான தண்டனை.**— பரீட்சையின் பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவரென அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அவரது பரீட்சார்த்தியாகுந் தன்மை ரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பிழையெனக் கண்டால், அல்லது வேண்டுமென்றே ஏதாவது ஒரு முக்கிய காரணத்தை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

9. தெரிவு செய்வதில் எந்தவிதமான ஆதரவு தேடுதலும், செல்வாக்குப் பிரயோகிக்க முயற்சித்தலும், அப்படியான பரீட்சார்த்தியைத் தகுதியற்றவராக்கும்.

10. **வைத்திய பரிசோதனை.**— தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் பொலிசு உத்தியோகத்தர்களாக இத்தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கேற்ற தேகாரோக்கியமுடையவர்களா என்று பார்க்கும் பொருட்டு வைத்திய பரிசோதனைக்கு உட்படவேண்டியிருப்பர். இவ்வைத்திய பரிசோதனையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் நியமிக்கப்படமாட்டார்கள்.

11. இவ்வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி 1, தொகுதி 2 இன் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

12. தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை சம்பந்தமாக 15.5.69 இல். 14,854 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 9.5.69 ஆம் திகதிய விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

கொழும்பு 1, அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 23 ந உ.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரிட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோறுற்தவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப் படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

(1) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணு நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

(3) பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

(5) பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

(6) பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

(7) வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

(8) பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

(9) ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

(10) கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

(11) பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

(12) பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

(13) தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்லப் பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

(14) பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

(15) பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

(16) பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவிசெய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு,**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்குசெய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப் படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்கடுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத் தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க **மேல் மூலையிலன்று**) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) விஞப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய விஞக்கள் தெரிவுக்குரிய விஞக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணுமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப் படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டின் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

10–1106—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## நொத்தாரிசு பிரதம பரீட்சை
## சனவரி 1971

*1. பரீட்சை நடைபெறும் திகதி :*

சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் நடத்தும் பிர சித்த நொத்தாரிசுமாராகும் கருத்துடன் உடன்படிக்கை செய்து பயிற்சிபெறும் பொருட்டு எழுதுவினைஞர்களை அனுமதிப்பதற்கான ஓர் போட்டிப் பரீட்சை, பரீட்சை இலாகாவால் 1971 ம் ஆண்டு சனவரி மாதம் 16 ந் திகதியன்று கொழும்பில் நடத்தப்படும்.

*2. புதிதாகச் சேர்த்தலின் முறை :*

தமிழ் மொழி மூலம் பொருந்திப் பயிலும் எழுதுவினைஞர் ஒரு வருக்கு மாத்திரம் இடமிருக்கிறது. அபேட்சகர் போட்டிப் பரீட் சையில் காட்டும், திறமை, குணம், தகுதி முதலியவற்றின் அடிப் படையில் தெரிவு செய்யப்படுவர். இப் பரீட்சைக்குரிய பாடத்திட் டங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

ஒருவரை மாத்திரம் புதிதாகச் சேர்த்துக் கொள்ள இடமிருப்ப தால், ஆகக் குறைந்தது, பதினைந்து வருடசேவை செய்திருக்கும் (தொடர்ந்து அல்லது தொடராமல்) நொத்தாரிசுவின் எழுது வினைஞர் மாத்திரம் இப்பரீட்சையில் போட்டியிடத் தகுதியுடைய வராவர்.

*3. வயது :*

பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று பரீட்சார்த்தி பதினெட்டு வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்.

*4. நொத்தாரிசுகளின் எழுதுவினைஞர்கள் :*

இப்பரீட்சை சம்பந்தமாய் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதிக்கு முன்பு 5 வருடங்களுக்குக் குறையாமல் உடன் தொடர்ச்சியாக நொத்தாரிசு உயர் தொழிலைப்புரியும் நோக் கத்துடன், ஓர் நொத்தாரிசுவின் கீழ் வேலையில் அமர்த்தப்பட்ட நொத்தாரிசுகளின் எழுதுவினைஞர்கள் மாத்திரம், நொத்தாரிசு களின் எழுதுவினைஞர்களாக கருதுவதற்கு உரித்துடையோராவார் கள். அவ்வித தகைமை பெற்ற விண்ணப்பக்காரர்கள் தாம் சேவை செய்த நொத்தாரிசுவிடமோ அல்லது நொத்தாரிசுமார்களிடமோ தம் மொத்தச் சேவைக்காலத்தை நிரூபிக்க உறுதியுரையோ அல் லது உறுதியுரைகளையோ பெற்று, விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். நொத்தாரிசுமார்களின் எழுது வினைஞர்களாக கடமையாற்றிய காலத்தை அல்லது காலங்களை அத்தாட்சிப்படுத்தி இலங்கை நொத்தாரிசு எழுதுவினைஞர்கள் சங் கத்திடமிருந்து அல்லது தாம் கடமையாற்றிய பகுதி காரியாதி காரியிடமிருந்தோ அல்லது காரியாதிகாரர்களிடமிருந்தோ உறுதி யுரைகள் பெற்று அனுப்புதல் உதவியாகவிருக்கும்.

*5. பாடத்திட்டம் பின்வருமாறு :*

பாஷை (சிங்களம்/தமிழ்) —2 மணி—200 புள்ளிகள்.

எழுத்துக்காக 40 புள்ளிகள் ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி தனது கருத்துக்களைத் தெளிவாகவும் இலக்கணவழுவின்றியும் எழுதும் ஆற்றல்யுடையவரா என்பதைச் சோதிக்கும் வகையில் கட்டுரை அமையும். சிங்கள/தமிழ் மொழி எழுதும்முறை, வாக்கிய நடை என்பன விசேடமாகக் கவனிக்கப்படும். கட்டுரைக்கு அரை மணி நேரம் பயன்படுத்தல் வேண்டும். ஒரு பந்தியை மூன்றில் ஒன்றாகச் சுருக்கி எழுதும்படியுள்ள விஞவும் கேட்கப்படும். செய்யுளின் பொழிப்புரை, செய்யுளினை அல்லது உரைப்பகுதியை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பழைய உரைநடையை தற்கால உரைநடையில் அமைத்தல், சிங்கள/தமிழ் மொழியும், மரபும் என்பனபற்றிய விஞக்கள் கேட்கப்படும்.

எண்கணிதமும், கூட்டல் கழித்தலும்—1½ மணி—100 புள்ளி கள்.

பின்னங்கள், வசமம் உட்பட எண்கணிதத்தில் உள்ள நான்கு விதிகளும் உள்ள தேர்ச்சி, நிறுத்தல், நீட்டல், நேரம், பரப்பு, கனம், முகத்தல் என்பன போன்ற அளவைகள், மீட்டர் அளவை முறை, விகிதமும் விகிதச் சாரமும், நூற்றுவீதம், இலாப நஷ்டம், சராசரி, தனிவட்டி, தொடர்வட்டி, மாற்றுவீதம்.

பொது அறிவு—45 நிமிடம்—100 புள்ளிகள்.

தற்கால நிகழ்ச்சிகள் (இலங்கையும் உலகமும்) புவியியல், சரித் திரம், இலக்கியம், கலாச்சாரம், கலையியல், விஞ்ஞானவியல் என் பனபற்றிய சுருக்கு விடைகளுக்குரிய விஞக்கள் கேட்கப்படும். இலங்கையைப்பற்றிய விசேட அறிவு எதிர்பார்க்கப்படும்.

*6. நேர அட்டவணை :*

திகதி—1971 சனவரி 16

முற்பகல் 9.30 தொடக்கம் 11.00 வரை—எண்கணிதம்.

பிற்பகல் 12.30 தொடக்கம் 2.30 வரை—சிங்கள/தமிழ் பாஷை.

பிற்பகல் 2.45 தொடக்கம் 3.30 வரை—பொது அறிவு.

7. இத்தால் கொடுக்கப்பட்டிருக்கின்ற மாதிரி விண்ணப்பப் பத் திரத்தின் பிரகாரம் விண்ணப்பப் பத்திரங்களைப் பதிவுகாரியகர்த் தர், கொழும்பு என விலாசமிட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்பு தல் வேண்டும். விண்ணப்பக்காரரின் சொந்தக் கையெழுத்தில், தாம் பரீட்சை எடுக்க எண்ணியிருக்கும் மொழியில் விண்ணப்பங் கள் எழுதப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடைசித் திகதி விண்ணப்பப் பத்திரங்கள் பதிவுக் காரியகர்த்தர் காரியாலயத்தில் 1970 ம் ஆண்டு நவம்பர் 25 ந் திகதி பிற்பகல் 1.00 மணிக்குப் பிந்தாமல் வந்துசேரும்படி அனுப்புதல் வேண்டும்.

*9. விண்ணப்பக் கட்டணம் :*

விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பம் செய்பவரால், முறைப்படி கீறிக் கிறுக்கப்பட்ட 10 ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டப் பெற்றதாயிருக்க வேண்டும்.

*10. விண்ணப்பத்தோடு இணைக்க வேண்டிய பத்திரங்கள் :*

(அ) அபேட்சகரின் நல்லொழுக்கத்தையும், யோக்கியதைகளை யும் பற்றி இரு சான்றுரைகளில் ஒன்றுவது மூன்று மாதத் திற்கு முற்படாத நிதரிசனப் பத்திரங்களும். (அபேட்ச கர் இதற்கு முன் வேலையில் ஏற்பட்டிருந்திருப்பாராகில் கடைசியாக அவரை வேலைக்கு வைத்திருந்தவரிட மிருந்து ஒரு நிதரிசனப்பத்திரம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்).

(ஆ) அபேட்சகரின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அல்லது அவ ரின் வயதைப் பற்றிய வேறு சாட்சியமும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். மேலே குறிப் பிட்டு இருக்கும் (அ), (ஆ) இவைகளின் மூலப்பிரதிகள் மட்டுமே விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

*11. விண்ணப்பத்திற்குரிய கட்டணத்தை திருப்பிக் கொடுத்தல் :*

(அ) இப்பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளை அவர் நிறைவேற்றுததின் நிமித்தம் அபேட்சகர் ஒருவரை ஏற்றுக் கொள்ளாது தள்ளிவிடுமிடத்து விண்ணப்பப் பத் திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் ஐந் தில் மூன்று பங்கு அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட அபேட்சகர் ஒருவர், பரீட்சைத் திகதிக்கு, குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பாகப் பரீட்சைக்கு பிரவேசியாதுவிடப் போவதைப் பற்றி பதிவுகாரியகர்த்தருக்கு அறிவித்தல் கொடுப்பாரா கில் அல்லது அவ்வபேட்சகர் சுகவீனத்தால் பரீட்சைக்கு போகமுடியாது, அச்சுகவீனத்தைப்பற்றி ஓர் தகுதியான வைத்தியரிடமிருந்து ஓர் மருத்துவச் சான்றிதழ் அனுப் பினல் அவருடைய விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் அரைவாசி அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(இ) வேறெக்காரணத்திஞலும் யாதொரு பணமும் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது.

12. இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட அபேட்சகர் ஒவ்வொரு வரும் ஓர் பிரவேசச் சீட்டும், ஒப்பப் பத்திரமும் அவருடைய விண்ணப்பப்பத்திரத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்

*பப்படும். குறித்த பிரவேசச் சீட்டையும் (நிரப்பப்பட்ட) ஒப்பப் பத்திரத்தையும் பரீட்சை நடைபெறும் இடத்திலும் நேரத்திலும் கொடுத்தல் வேண்டும்.*

*13. தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடமும் பரீட்சிக்கப்படும் நேரத்தில் மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கதாக பரீட்சை மண்டபத்தில் தம்மை நிரூபிப்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்களைச் சகல அபேட்சகர்களும் காட்ட வேண்டும். அக்கருமத்திற்காப் பிற்கூறப்படும் சாதனங்களிலொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.*

*(அ) அஞ்சல் தலைமை அதிபரால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு ;*

*(ஆ) பரீட்சைத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வழங்கப்பட்ட பெலப்புள்ள "பாஸ்போட்" ;*

*(இ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்குள் ஒரு அரசாங்க இலாகாவின் அதிகாரத்தின் பேரில் வழங்கப்பட்டதும், அவை வைத்திருப்பவரின் புகைப்படத்தைக் கொண்டதுமான யதாயினுமொரு உறுதியுரை உத்தரவுப்பத்திரம் அல்லது வேறு சாதனங்கள்.*

*அபேட்சகர்கள் எவரும் தம் பிரவேசச் சீட்டோடு மேற்குறிக்கப்பட்டவற்றில் யாதாயினுமொரு சாதனமாவது வைத்திராவிடில் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.*

*14. விண்ணப்பக்காரர் பரீட்சைக்கு பிரவேசிப்பதற்கு விண்ணப்பஞ் செய்ய உத்தேசித்திருப்பதாகத் தாம் வசிக்கும் மாவட்ட அதிபரிடம் அறிவித்தல் கொடுக்க வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை.*

*எச். எம். இசட். பாரூக்,*
***பதிவுகாரியகர்த்தர்.***

*பதிவுகாரியகர்த்தர் **அலுவலகம்,***
*கொழும்பு-1,*
*1970 அக்டோபர் 19.*

***மேற்குறிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரன் மாதிரிப் பத்திரம்***

*பதிவுகாரியகர்த்தர், கொழும்பு.* திகதி..................

**உடன்படிக்கைப்பட்ட எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கு விண்ணப்பம்**

ஐயா,

நொத்தாரிசு ஆகும் நோக்கத்துடன் உடன்படிக்கைப்பட்ட எழுதுவினைஞராய் அமர நான் உத்தேசித்திருப்பதால் இதற்கென 1970 ம் ஆண்டு சனவரி மாதம் 16 ந் திகதி நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கு விண்ணப்பம் செய்கிறேன்.

(2) எனது முழுப் பெயர் :————.

(3) ...................... மாவட்டத்தில் ...................... என்ற இடத்தில் நான் வசிக்கிறேன்.

(4) பரீட்சை தொடங்கும் திகதியிலிருந்து எனக்கு வயது பதினெட்டுக்குக் குறையாததாக இருக்கும். எனது பிறப்புச் சாட்சிப் பத்திரம் (அல்லது ........................... ஆகிய எனது வயதைக் குறிக்கும் வேறு அத்தாட்சிப் பத்திரம்) (அ) என அடையாளமிடப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.

(5) உயர்தர நீதிமன்ற நியாயதுரந்தரராகிய ............ ன்...... கீழே பொருத்தவுடன்படிக்கை செய்யும் எழுதுவினைஞராகக் கடமை பார்க்க எண்ணுகிறேன்.

(6) நான் ......................... மாவட்டத்தில் .......... மொழியில் தொழில் நடத்த உத்தேசித்திருக்கிறேன்.

(7) (அ) எனது நல்லொழுக்கத்தையும் தகுதியையும் பற்றி ........ ................................ இடத்து ............. ராலும் கொடுக்கப்பட்ட இரு நிதரிசனப் பத்திரங்களின் மூலப் பிரதிகளை (ஆ), (இ) என அடையாளமிட்டு இத்துடன் இணைத்திருக்கிறேன்.

*(ஆ) நான் கீழே குறிக்கப்படும் நொத்தாரிசு/நொத்தாரிசுமார்களின் கீழ் அவருடைய பெயருக்கு/பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்ட காலத்தில்/காலங்களில் ஒரு எழுதுவினைஞராய் கடமையாற்றி வந்திருக்கிறேன்.

.............................. மாவட்டத்திலிருக்கும் நொத்தாரிசு ......................... அவர்களின் கீழ் 19.... ம் ஆண்டு ................ மாதம் ...... ந் திகதி தொடக்கம் 19 .... ம் ஆண்டு .......... மாதம் .... ந் திகதி வரை.

*(இ) நான் நொத்தாரிசுவின் எழுதுவினைஞராக மேலே சொல்லப்பட்ட காலத்தில்/காலங்களில் கடமையாற்றினேனென்பதற்குச் சான்றாக மேற் சொல்லப்பட்ட நொத்தாரிசுவிடம்/நொத்தாரிசுமார்களிடமிருந்து உறுதியுரை/உறுதியுரைகளை இத்துடன் இணைக்கிறேன்.

(8) உடன்படிக்கைப்பட்ட எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குப் பிரவேசிக்க அனுமதி தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

————,
விண்ணப்பம் செய்பவரின் கையொப்பம்.

தபால் விலாசம் :—

..............................

..............................

..............................

| விண்ணப்பக்காரர் இதில் 10 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி, அதன் மேல் ஒப்பமும் திகதியும் இடவேண்டும் |
|---|

*தேவையில்லாதவற்றைக் கீறிவிடவும்.
எத்தனை முறை தேவையோ அத்தனைமுறை எழுத வேண்டும்.

முதலாவது உறுதியுரை "ஈ" என்று அடையாளமிடவும் ; மற்றவைகளை "உ", "ஊ" என்று முறையே அடையாளமிடவும்.

10–1027—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

### திகதி முத்திரைக்கான கருப்பு மை விநியோகித்தலுக்கான கேள்விப் பத்திரங்கள்

திகதி முத்திரைக்கான கருப்பு மை விநியோகித்தலுக்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகத்திலுள்ள பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் இலங்கை உற்பத்தியாளர்களிடமிருந்து 1970 நவம்பர் 14 ம் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 1970 நவம்பர் 14 ம் திகதி மு. ப. 10.05 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர்கள் விரும்பின், கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 5, நாராஹேன்பிட்டவிலுள்ள உபகரணம், கட்டடம், நலன்புரி சேவை, களஞ்சியம் ஆகியவற்றின் உதவி அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய பத்திரங்களிலேயே அனுப்புதல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணைகள் செய்யும் கருமபீடத்தில் (இல. 4) கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திரச் சாதனங்கள் 1970 நவம்பர் 1 ம் திகதி தொடக்கம் 1970 நவம்பர் 12 ம் திகதி பி. ப. 1.00 மணி வரை வழங்கப்படும்.

5. மேலதிக விபரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டவிலுள்ள உபகரணம், கட்டடம், நலன்புரி சேவை, களஞ்சியம் ஆகியவற்றின் உதவி அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம். பீ. த சில்வா,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம் (அஞ்சல் சேவைகள்).

அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

10–1151—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல், 1971

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1971 ம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ம் ந் திகதி 1971 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர், வவுனியா ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப்பத்திரங்களுக்க விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினுல் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்புகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், வவுனியா என்று முகவரியிடப்பட்ட உறைகளில வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும் இடதுபக்கத்து கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத் தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவர்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய் விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள்பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக் குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படி யும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந் தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியோகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத் தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடனடிக்கை நிபந்தனைகளையும் கேள்விக் காரர்கள் கவனிக்கவேண்டும்.

வவுனியா,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 19 ந் வ.

பொ. இரத்தினசபாபதி,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

### குறித்த அட்டவணை

| (1) | (2) | (3) | (4) | (5) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| தாபனங்கள் வவுனியாப் பகுதி | கேள்விக் கட்டுப் பணம் ரூ. | பிணை வைப்புப் பணம் ரூ. | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | காய்கறி | மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | காய்கறி |
| செட்டிகுளம் கிராமிய ஆஸ் பத்திரி .. | 100 .. | 800 | 16.11.70.. | 670 .. | — .. | 340 .. | 1,320 .. | 750 .. | — .. | 360 .. | 1,440 |
| பேசாலை கிராமய ஆஸ்பத்திரி | 100 .. | 600 | மு.ப. | 660 .. | — .. | 310 .. | 1,260 .. | 580 .. | — .. | 280 .. | 1,100 |
| சிலாபத்துறை கிராமிய ஆஸ் பத்திரி .. | 100 .. | 600 | 10.00 மணி | 700 .. | — .. | 690 .. | 1,070 .. | 1,100 .. | — .. | 1,100 .. | 1,550 |
| மாங்குளம், பிரசவ விடுதி .. | 100 .. | 400 | | 230 .. | — .. | 460 .. | 930 .. | 150 .. | — .. | 280 .. | 590 |
| பூவரசங்குளம் பிரசவ விடுதி | 100 .. | 400 | | 410 .. | — .. | 210 .. | 810 .. | 340 .. | — .. | 170 .. | 710 |
| பாவற்குளம் பிரசவ விடுதி | 100 .. | 400 | | 370 .. | — .. | 180 .. | 740 .. | 90 .. | — .. | 50 .. | 180 |
| புதுகுடியிருப்பு கி. ஆ. .. | 100 .. | 600 — | | 500 .. | — .. | 450 .. | 1,260 .. | 910 .. | — .. | 970 .. | 2,440 |

10–1119—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

## பாவிக்கப்பட்ட இரண்டு லொறிகளின் விற்பனை

கீழ்க்காணும் லொறிகளைக் கொள்முதல் செய்து அகற்றிக்கொள்வதற்கு முத்திரை பொறித்து மூடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ந் தேதி பிற்பகல் 3.00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) மொரிஸ் கொமர்சல் 33ஸ்ரீ 2987. (2) மொரிஸ் கொமர்சல் 33ஸ்ரீ2991.

இவை மூடப்பட்ட உருவக அமைப்பினையுடையனவாகவும், 3–5 தொன் கொள்திறனுடையனவாகவும், பெற்ரேலில் இயங்குகின்றன வுமான லொறிகளாகும்.

கேள்வி விண்ணப்பப் பத்திரங்களும் இக்கேள்வி சம்பந்தமான நிபந்தனைகளும் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ச. சண்முகம்,
தேயிலைக் கட்டுப்பாட்டாளர்.

தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
அ. பெ. இலக்கம் 363,
இலங்கை வர்த்தக வங்கிக் கட்டிடம்,
கொழும்பு, 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ந் தேதி.

10–1141—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

இல. இப/260 (70/71).

## காலிக் கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1970 நவம்பர் மாதம் 29 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக் கொமிசனர் திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரினுல் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விக்காரர்கள் அக்காரியாலயத்தில் சமுகமாயிருக்கலாம். கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி, காலிமுக செக்ரடேரியட் கட்டிடத்தின் 3 ம் மாடியில் அமைந்துள்ள காணிக் கொமிசனர் காரியாலயத்தின் 357 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2.** காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாயுள்ள திட்டத்தை மேற்படி அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்த்துக்கொள்ளக்கூடியதாயுள்ளதுடன் அது சம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. அரசாங்கவேலை, நீர்ப்பாசனம் அல்லது கல்வித் திணைக்களங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வித வேலைகளை நல்ல முறையில் செய்து முடிப்பதற்குத் திறமையுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் இவ்வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனுல் அவர்கள் ரூபா 100/– ஐ கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன் பதிவு பெற்றிருத்தல், திறமை சம்பந்தமான சான்றுப் பத்திரம் ஆதியனவற்றை மேற்படி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். 1970 நவம்பர் மாதம் 23 ந் தேதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரத்துக்கான படிவங்கள் வழங்கப்படும். பதிவுபெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தமது திறமை சம்பந்தமான சான்றுப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இக்கேள்விக்கான வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " .................................... க்கான கேள்விப் பத்திரம் " எனக்குறிபிட்டு எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு சீல் (முத்திரை) வைத்துப் பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப்லியூ. எல். ஆர். பீ. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
காலி,
1970 ம் ஆல செப்ரம்பர் மீ 18 ந உ.

### அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு பெற்றிருக்கவேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. ஊறல—கல்கெட்டிய வீதி 1 வது மைலில் எஞ்சிய வேலை | கங்கபொட பத்துவ | 50,000 |
| 2. உடுமலகல குடியேற்றப் பாதை 1 வது மைலில் நிரந்தர பாலம் | தல்பே பத்துவ .. | 30,000 |

10–976—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலைகள் செய்வதற்காக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் 15.11.70 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

### வேலை விபரம்

(1) யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சி காரியாதிகாரி பிரிவிலுள்ள வெலிக்கண்டலுக்கு உட்செல்லும் பாதைக்கு கிறவல் இடுதல் ;

(2) வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள விசுவமடுக் குளம் படித்த வாலிபர் திட்டத்துக்கு உட்செல்லும் பாதை அமைத்தல் ;

(3) துணுக்காய் காரியாதிகாரி பிரிவிலுள்ள புத்துவெட்டுவான் குடியேற்ற உத்தியோகத்தரின் விடுதி திருத்த வேலைகள் செய்தல்.

2. மேலே குறிப்பிட்ட வேலைக்கு அரசாங்க திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும், கிராமாபிருத்திச் சங்கங்களுக்கும், யாழ்ப்பாணக் கச்சேரி காணிக் கிளையிலிருந்து 11.11.70 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது ஒப்பந்தப் பதிவு பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திர வைப்புப்பணமாகச் செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்தபின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப் பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப்பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாருயினும் மேற்கூறப்பட்ட சமர்ப் பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் யாழ்ப்பாண செயலகத்திலுள்ள அலுவலக உதவியாளர் அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் முடிவுத் திகதியன்ரே அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள **நேரத்திற்குப் பின்பு** கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்ட பின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்துத் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாது அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்து பத்து நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள பிணைப்பணத்தைச் செலுத்தாதுவிடின் செலுத்தப் பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர், ஒப்பந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமான வரை வேலைத்தலத்துக்கு அருகாமையில் இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய ஏதேனும் தகவல் அறியவிரும்பின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தகாரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் எவ்வித கேள்விகளுக்கு இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரகாரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாத காலம் வரையும் அமுலில் இருப்பதாகக் கருதப்படும்.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை,
செயலகம், யாழ்ப்பாணம்.
21.10.70.

10-1093—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## ஆயுள்வேத திணைக்களம்

### கழிவுப் பொருள் அகற்றல்

1970 மார்கழி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1971 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் 325 ஆம் இலக்க கொழும்பு கொட்டா வீதியிலுள்ள ஆயுள்வேத மத்திய வைத்திய சாலை சமையலறையிலிருந்து தெங்குக் கழிவுப் பொருள் மற்றும் உணவுக் கழிவுப் பொருள் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதற்கான கேள்விகள் ஆயுள்வேத ஆணையாளரினால் 1970 ஆம் ஆண்டு கார்த்திகை 17 ஆந் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. திருப்பிக் கொடுக்கப்பாலதான 10 ரூபா கேள்விக் கட்டுப் பணம் இவ்வலுவலகத்தில் கட்டப்படல் வேண்டும். அக்கட்டுப் பணத்தின் பற்றுச்சீட்டை கேள்வியுடன் இணைத்து இந்த அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். கேள்விக்கட்டுப்பணபற்றுச் சீட்டுடன் அனுப்பப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அச்சிட்ட கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. தெங்கு கழிவுப் பொருள் மற்றும் உணவுக் கழிவுப்பொருள் ஆகியவற்றை தினமும் அப்புறப்படுத்துவதற்கு கேள்வியாளர்கள் மாத மொன்றுக்கு கொடுக்க உத்தேசிக்கும் விகிதத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். 300 ரூபா கட்டுப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். ஒப்பந்தம் முடிவடைந்த பின்னரே இக்கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். ஒவ்வொரு மாதமும் 1 ஆந் திகதி அன்று குறித்த மாதாந்த கொடுப்பனவு கட்டப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் தான் தெங்குக் கழிவுப் பொருள் மற்றும் உணவுக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த அனுமதிக்கப்படும். இக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த கேள்வியாளர்கள் தங்கள் சொந்த பாத்திரங்களை உபயோகித்தல் வேண்டும்.

கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் "கொழும்பு, ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை கழிவுப் பொருள் அப்புறப்படுத்தலுக்கான கேள்வி" என எழுதப்பட்ட கேள்விகள் பதிவஞ்சல் மூலம் ஆயுள்வேத ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அன்னாரிடம் நேரடியாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

1970 கார்த்திகை 17 ஆம் திகதி அன்று ஆயுள்வேத ஆணையாளரினால் கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8.
17.10.1970.

10-1030—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### அச்சியந்திரசாலையிலுள்ள உலோக மண்டி (Metal Dross)

பரீட்சைப் பகுதியின் அச்சியந்திரசாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஏறக்குறைய 10 அந்தர் நிறையுள்ள உலோக மண்டியினை (Metal Dross) கொள்வனவு செய்வதற்கும் அவற்றை அப்புறப்படுத்துவதற்குமான கேள்விப் பத்திரங்கள், 1970, நவம்பர் 23 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணி வரை, கொழும்பு 2 இலுள்ள பரீட்சைப் பகுதிப் பரீட்சாதிகாரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சீல் வைக்கப்பட்டதும், இடது பக்க மேல் மூலையில் "உலோக மண்டியினைக் கொள்வனவு செய்வதற்கும் அப்புறப்படுத்துவதற்குமான கூறுவிலைகள்" என எழுதப்பட்டதுமான தபாலுறையினுள் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. ஒரு அந்தர் உலோக மண்டிக்குக் கேள்வியாளர் குறிக்கும் வீதங்கள் கேள்விப் பத்திரத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

3. உலோக மண்டி மாதிரிப் பொருட்களைக் கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரைக்கும், போயாவுக்கு முதல் நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரைக்கும் இவ்வலுவலகத்தில் பார்வையிடலாம்.

4. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவருடைய கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுள், கேள்வித் தொகை முழுவதையுஞ் செலுத்தி, அத்துடன், உலோக மண்டி முழுவதையுமே அப்புறப்படுத்துதல் வேண்டும்.

கே. சீ. டபிள்யூ. கமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1970, அக்டோபர் 16 ஆம் திகதி.

10-973—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

# நானாவித அறிவித்தல்கள்

## காணிக்கமிசனர் திணைக்களம்

கொழும்பு மாவட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள வேலைக்காக 1970.11.14 ஆம் திகதி பி. ப. 2.30 வரை கொழும்பு தபால் பெட்டி 500, காணிக் கமிசனர் திணைக்களத்தின் கேள்விப்பத்திர சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அன்றைக்கே பி. ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

| வேலை விபரம் | பதிவு செய்யப்பட வேண்டிய பணம் |
|---|---|
| கொழும்பு காசல் வீதியில் காணிக்கமிசனர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியத்தை திருத்துதல் ... | ரூபா 5,000 |

2. கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரிகள் கொழும்பு காணிக்கமிசனர் திணைக்களத்தில் காணிக்கமிசனர் பெயரில் உரிய வேலைக்காக ரூபா 10 ஐக் கட்டி பெற்றுக்கொண்ட பட்டியலைச் சமர்ப்பித்ததும் கேள்விப் பத்திரம் கொடுக்கப்படும். செக் பத்திரம், பணப்பத்திரம், தபால் பணப்பத்திரம் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனுமதிக்கப்பட்ட கிராமச் சங்கம், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் உட்பட சங்கங்கள் பலநோக்குச் சங்கங்கள் ஆகியவை போன்ற சங்கங்களும் இவ் வேலைக்காக பதிவு செய்யப்பட வேண்டிய பண அளவிற்கு அல்லது அதற்குக் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் விண்ணப்பிக்கத்தகுதியுண்டு. இவைகள் கல்வி இலாக்கா, நீர்ப்பாசன இலாக்கா, பகிரங்க வேலைப் பகுதி ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திர பதிவுப் பணத்திலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இவை மேலே சொல்லப்பட்டுள்ள பணத்திற்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் மாத்திரம் கேள்விப் பத்திரம் கொடுக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை நிரப்பி இரண்டு பிரதிகளுடன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேணடும். கேள்விப் பத்திரத்தைத் தாங்கிவரும் என்பலப் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டியதுடன் கடித உறையின் இடதுபக்கத்தின் மேல்பகுதியில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் தபாலில் அனுப்பப்படாவிடில் காலிமுக வீதி செக்கிரட்டறியட் கட்டிடத்தில் 320 ஆம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் போடல் வேண்டும்.

4. 1970.11.12 ஆம் திகதி பி. ப. 2.30 மணி வரை மட்டும் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும்.

5. தங்கள் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திடல் வேண்டியதுடன் பிணைப்பணம் வைத்திருக்கத்தவறும் கேள்விப்பத்திரகாரரின் விண்ணப்பம் ரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமும் அரசாங்கச் சொத்தாக்கப்படும்.

6. இந்த வேலைக்கு பயிற்றப்பட்ட பயிற்சியற்ற ஆகிய இருவகை இலங்கை கூலியாட்களை பயன்படுத்துதலுக்கு விண்ணப்பதாரி இணக்கம் தெரிவித்தல் வேண்டும். இக்கூலியாட்களை கூடிய அளவு வேலை செய்யும் பகுதியிலிருந்தே தெரிவு செய்தல் வேண்டும்

7. கேள்விப் பத்திர வேலை சம்பந்தமாக மேலதிக விபரங்களை காணிக்கமிசனர் திணைக்களத்தில் தெரிந்துகொள்ளலாம்.

டி. டி. விக்கிரமதுங்கா,
காணிக்கமிசனருக்காக.

1970.10.20 ஆம் திகதி,
காணிக்கமிசனர் காரியாலயம்.

10-1091—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## 1964 ஆம் ஆண்டு, இலங்கைக் கட்டளைகள் பணியக அதிகாரச் சட்ட இல. 38 இன் பிரிவு 16 இன் கீழ், அறிவிப்பு

1964 ஆம் ஆண்டின் இலங்கைக் கட்டளைகள் பணியக அதிகாரச் சட்ட இல. 38 இன் பிரிவு 16 (1) இன் கீழ், இவ்வகைக்குரிய பட்டோலையில் திட்டமிடப்பட்ட குறியே, பணியகத்தின் கட்டளையாக்கக் குறியாகப் பணியகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எவ்வியாபாரப் பொருளுக்கும் அல்லது வியாபாரப் பொருளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது செயற்படுத்துகைக்கும் பணியகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு விவரக்கூற்றுக்குரிய குறித்த கட்டளையாக்கக் குறியானது, அவ்வப் பொருளின் தொடர்பில் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

றெனல்ட் ரி. விஜேவந்தா,
பணிப்பாளர், இலங்கைக் கட்டளைகள் பணியகம்.

கொழும்பு 3,
ஒக்ரோபர் 21, 1970.

பட்டோலை

பணியகத்தின் கட்டளையாக்கக் குறி

10-1129—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

---

## விற்பனைத் திணைக்களம்

### சாக்கு வியாபாரிகளை பதிவுசெய்தல்

கொழும்பு 1, பிறிஸ்டல் வீதி பி. எஸ். எஸ்.ஐ. கட்டிடத்திலுள்ள விற்பனை அபிவிருத்தி, ஆணையாளரால், 1970 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 14 ம் திகதி பி. ப. 3.00 மணிவரையும் விற்பனைத் திணைக்களத்திலிருந்து சாக்கு கொள்வனவு செய்ய விரும்பும் வியாபாரிகளாக பதிவு செய்யும் பொருட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் விற்பனைத் திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரிகளிலோ ரூபா 100 வைப்புப் பணமாக கட்டுதல்வேண்டும்.

இதற்குமுன் பதிவு செய்யப்பட்டவர்கள் புதிய விண்ணப்பமும் கட்டுப் பணமும் அனுப்புதல் வேண்டும்.

விற்பனைத் திணைக்களத்திலுள்ள வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்தே ஏற்றுக்கொள்ளப்படும்.

என். வாமதேவா,
விற்பனை அபிவிருத்தி ஆணையாளருக்காக.

விற்பனைத் திணைக்களம்,
பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம்,
பிறிஸ்டல் வீதி,
கொழும்பு 1, 1970 ஆண்டு ஒக்டோபர் மீ 21 ந் உ.

10-1126—30.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,930

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் **ஏற்றுக்கொள்ளமாட்டார்**

அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.